# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆம் திகதிய
பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2026.08.07 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# நீதித்துறை (திருத்தம்)

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தினைத்
திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய  ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 14.50**        **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** இவ்வாசகமானது (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனானது மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை நூற்றியிருபது நீதிபதிகளாக அதிகரிப்பதாகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனானது மேல் நீதிமன்ற நீதிபதிகளின் மற்றும் நீதிவான்கள் உட்பட மற்றெல்லா நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்துவதாகும்.

ச.வ.-ஒ. 25/2026

## 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது, அதன் (அ) என்னும் பந்தியின் “நூற்றிப்பத்திற்கு மேற்படாதவருமான” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “நூற்றியிருபதிற்கு மேற்படாதவர்களுமான” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத் தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்

(1) அதன் 3 ஆம் உட்பிரிவில் “அறுபத்தொன்றாக விருத்தல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அறுபத்துமூன்றாகவிருத்தல் வேண் டும்.”; அத்துடன்

(2) அதன் 4 ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் -

“(4) (355 ஆம் அத்தியாயமான) பகிரங்க அலுவலர்களும் நீதித்துறை அலுவலர்களும் (ஓய்வுபெறுதல்) கட்டளைச்சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், மற்றெல்லா நீதிபதிகளும் நீதிவான்களும் ஓய்வுபெறும் வயது அறுபத்தியிரண்டாகவிருத்தல் வேண்டும்.”.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

PL 15892- 470 (2026/08)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.